# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அனுப்புநர்
திரு.எஸ்.ரவிச்சந்திரன், பி.ஏ.,
ஆணையாளர்,
நகராட்சி அலுவலகம்,
கடையநல்லூர்.

பெறுநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி.

**ந.க.எண்.1838/2022/இ1** **நாள்.23.10.2024**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள் – கடையநல்லூர் நகராட்சி – அக்டோபர்–2024 மாதம் நகர்மன்ற சாதாரணக் கூட்டம் நடத்தப்பட்டது – கூட்ட நடவடிக்கை விபரங்கள் அனுப்பி வைத்தல் –சார்பாக.

**பார்வை:-** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் குறிப்பாணை கடித ந.க.எண்.2652/2022/அ3 நாள்.18.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித்ததில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சியில் 18.10.2024 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் கூட்ட நடவடிக்கை விபரங்கள் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு**
18.10.2024 அன்று நடைபெற்ற
நகர்மன்றக் கூட்டப்பொருள்

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி.

## கடையநல்லூர் நகராட்சி

## 18.10.2024 அன்று நடைபெற்றசாதாரணக் கூட்ட பொருள்கள் விபரம்

**பொருள் எண். 1**

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண்.2316 நாள்.30.09.1966ன்படி கடையநல்லூர் கிருஷ்ணாபுரம் வைரவன் குளம் வருவாய் கிராமங்களையும் கம்பனேரி – புதுக்குடி கிராமத்தில் ஒரு பகுதியையும் சேர்த்து கடையநல்லூர் நகராட்சியாக 01.10.1966 முதல் இயங்கி வருகிறது. தற்போது அரசாணை (நிலை எண்.238 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.12.2008ன்படி முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகரின் பரப்பளவு 52.25 ச.கி.மீட்டர் ஆகும் 2011ம் ஆண்டு மக்கள் தொகை 90364 ஆகும். இதில் ஆண்கள்.45449, பெண்கள்.44915 தற்போதையா 2024ம் ஆண்டு தோராய மக்கள் தொகை 102410 ஆகும். இந்நகராட்சியில் 33 வார்டுகள் அமைந்துள்ளது. மக்கள் தொகை பெருகி வரும் இந்நகராட்சியில் தற்போது 32390 எண்ணம் குடியிருப்புகள் உள்ளது.

**இந்நகராட்சியில் கடந்த மூன்று வருடங்களாக கீழ்கண்டவாறு வருவாய் வரப்பெற்றுள்ளது.**

| வ. எண் | ஆண்டு | ஆண்டு வருவாய் வருமானம் (ரூ) | நகராட்சியின் சொந்த வருமானம் (ரூ) | ஆண்டு செலவினம் (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 2021–2022 | 242023221 | 99879950 | 193431570 |
| 2 | 2022–2023 | 369934728 | 93092601 | 240189678 |
| 3 | 2023–2024 | 335139158 | 112786611 | 375563444 |

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023ன் விதி எண்.3ல் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் நகராட்சியின் தரத்தினை சீராய்வு செய்து தரம் உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. பதினேழாவது அறிக்கை (பதினாறாவது பேரவை) (பொது) மதிப்பீட்டுக்குழு பத்தி எண்.104ல் அறிக்கையில் முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள கடையநல்லூர் நகராட்சியை ஆண்டு வருமானம் அதிகமாக உள்ளதால், தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்நகரில் மக்கள் தொகை பெருகி வருவதாலும் இந்நகரின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டும் இந்நகரில் பொதுமக்களுக்கு உடனுக்குடன் அடிப்படை வசதிகள் செய்து வழங்க ஏதுவாக முதல் நிலை நகராட்சியான கடையநல்லூர் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2660/2024/சி1)

**தீர்மானம் எண். 657**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 2**

கடையநல்லூர் நகராட்சியில் இயங்கி வரும் கணினி வசூல் மையங்களுக்கு VPN CONNECTION (VIRTUAL PRIVATE NETWORK) BSNL நிறுவனம் மூலம் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி இணைப்புகளுக்கு 01.04.2024 முதல் 30.06.2024 வரையிலான காலத்திற்கு கட்டணம் ரூ.47250/-ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3727/2021/அ1)**

**தீர்மானம் எண். 658**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொது பிரிவில் 2024-2025ம் ஆண்டிற்கு அலுவலகப் பயன்பாட்டிற்கு தேவையான டோனர்கள்,பேப்பர்கள், பதிவேடுகள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்கி வழங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.15,00,000/-க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.642 நாள்.16.08.2024ன் படி மன்ற அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையிலும் 05.09.2024 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **"The Kovilpatti Printers service Industrial Co-operative Society Ltd., IND No.1872, Kovilpatti"** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No. | Paticulars | The Kovilpatti Printers service Industrial Co-operative Society Ltd., IND No.1872, Kovilpatti Per Rate (GST நீங்கலாக) | Tirunelveli Dt Contract Labour Industrial Co-operative Society Ltd ,37,Sankarankovil Road, Tirunelveli-Town Per Rate (GST நீங்கலாக) | The Melagaram Printing Workers Industrial Co-operative Society Ltd., IND No. 923,Tenkasi Per Rate (GST நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | Red Gel pen | 600.00 | 650.00 | 680.00 |
| 2 | Black gel pen uniball | 675.00 | 685.00 | 695.00 |
| 3 | Blue gel pen | 600.00 | 650.00 | 680.00 |
| 4 | A4 Paper | 385.00 | 585.00 | 685.00 |
| 5 | Stapler | 415.00 | 515.00 | 615.00 |
| 6 | 192 Pg Ruled note | 300.00 | 500.00 | 800.00 |
| 7 | 1 Qr Ruled note | 150.00 | 550.00 | 850.00 |
| 8 | 28A tonner | 8450.00 | 10450.00 | 12450.00 |
| 9 | 111s tonner | 4500.00 | 6500.00 | 8500.00 |
| 10 | 88A tonner | 5600.00 | 8600.00 | 9600.00 |
| 11 | Xerox machine tonner | 11600.00 | 13600.00 | 14600.00 |
| 12 | 55A tonner | 14125.00 | 16125.00 | 18125.00 |
| 13 | Tin Tag | 180.00 | 380.00 | 480.00 |
| 14 | Epson ribbon cartridge | 325.00 | 525.00 | 625.00 |
| 15 | Office cover big size | 3.00 | 4.00 | 6.00 |
| 16 | Gum bottle big | 125.00 | 320.00 | 390.00 |
| 17 | Flop | 60.00 | 85.00 | 105.00 |
| 18 | HSC Register | 225.00 | 525.00 | 625.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | Cover small | 2.50 | 3.00 | 5.00 |
| 20 | Date seal | 550.00 | 750.00 | 950.00 |
| 21 | Tax bill Receipt | 3.85 | 5.00 | 8.00 |
| 22 | Chitta | 1145 | 3145.00 | 5145.00 |
| 23 | Rubber band | 75.00 | 95.00 | 105.00 |
| 24 | Conquare paper | 550.00 | 850.00 | 1050.00 |
| 25 | Muster note 33 numbers | 550.00 | 850.00 | 1050.00 |
| 26 | Amma unavagam token | 550.00 | 850.00 | 1050.00 |
| 27 | Council attendence Register | 400.00 | 600.00 | 800.00 |
| 28 | நகர் மன்ற கூட்ட நடவடிக்கை பதிவேடு | 4200.00 | 4800.00 | 5800.00 |
| 29 | New water supply application form | 400.00 | 600.00 | 800.00 |
| 30 | Earn leave note | 400.00 | 600.00 | 800.00 |
| 31 | Property tax name transfer | 400.00 | 600.00 | 800.00 |
| 32 | Water tax name transfer application form | 400.00 | 600.00 | 800.00 |
| 33 | New assessment application form | 400.00 | 600.00 | 800.00 |
| 34 | License. renewal application form | 400.00 | 600.00 | 800.00 |
| 35 | Birth register form | 6.00 | 8.00 | 10.00 |
| 36 | Mani value register | 700.00 | 900.00 | 1000.00 |
| 37 | Birth form I | 600.00 | 800.00 | 900.00 |
| 38 | Death form II | 600.00 | 800.00 | 900.00 |
| 39 | Form 4A Death | 4.00 | 6.00 | 10.00 |
| 40 | Pin box | 70.00 | 95.00 | 105.00 |
| 41 | File pad | 60.00 | 95.00 | 105.00 |
| 42 | Wrapper sheet | 7.00 | 10.00 | 15.00 |
| 43 | D & O form | 5.00 | 8.00 | 10.00 |
| 44 | Name transfer register | 550.00 | 750.00 | 950.00 |
| 45 | Personal register | 550.00 | 750.00 | 950.00 |
| 46 | Running note | 200.00 | 800.00 | 1000.00 |
| 47 | Travelling allowance form | 5.00 | 8.00 | 8.00 |
| 48 | இறுதி அறிவிப்பு நோட்டிஸ் | 285.00 | 485.00 | 685.00 |
| 49 | ஜப்தி அறிக்கை நோட்டிஸ் | 285.00 | 485.00 | 685.00 |
| 50 | வாரச்சந்தை மற்றும் ரூ.10-100 புக் ரூ.20-100 புக் ரூ.30-100 புக் | 105.00 | 305.00 | 605.00 |
| 51 | தினசரி சந்தை ரூ.10-150 புக் ரூ.20-150 புக் ரூ.30-150 புக் | 105.00 | 305.00 | 605.00 |
| 52 | இட்லி டோக்கன் 1.ரூ 1புக் 1000 வீதம் | 285.00 | 385.00 | 685.00 |
| 53 | சாம்பார் சாதம் டோக்கன் 1புக் 1000 வீதம் | 250.00 | 550.00 | 850.00 |
| 54 | தயிர் சாதம் 1புக் 1000 வீதம் | 250.00 | 550.00 | 850.00 |
| 55 | அம்மா உணவகம் மளிகை சாமான் இருப்பு பதிவேடு | 1600.00 | 1800.00 | 2000.00 |
| 56 | Mouse | 600.00 | 800.00 | 900.00 |
| 57 | Survey report form | 6.00 | 8.00 | 10.00 |
| 58 | FSTP Tipping fee receipt | 175.00 | 375.00 | 675.00 |
| 59 | Pay book | 300.00 | 400.00 | 600.00 |
| 60 | Tender Register | 530.00 | 630.00 | 830.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 61 | Register of estimates allotment | 550.00 | 850.00 | 950.00 |
| 62 | M.Book 100 | 140.00 | 340.00 | 440.00 |
| 63 | Asset register | 550.00 | 850.00 | 950.00 |
| 64 | Writing pad | 600.00 | 800.00 | 1000.00 |
| 65 | Log book 200 pg | 475.00 | 875.00 | 975.00 |
| 66 | காக்கி கவர் பெரியது | 8.00 | 10.00 | 15.00 |
| 67 | M.Book 50 | 110.00 | 410.00 | 610.00 |

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.76/2024/அ4)**

**தீர்மானம் எண். 659**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டாட்டா ஏசி மினி ஆட்டோ எண். TN 76AP 4394 வாகனம் தகுதிச்சான்று 07.06.2024 தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு சில பழுதுகள் சரி செய்திட வேண்டியுள்ளதாள் தகுதியான ஒப்பந்தப்புள்ளி கோரி பழுதுகளை நீக்கம் செய்திடவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.35,000/-(ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1256/2024/எச்1)**

**தீர்மானம் எண். 660**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டிப்பர் லாரி எண்.TN76AF5635 வாகனம் தகுதிச்சான்று 21.08.2024 தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு சில பழுதுகள் சரி செய்திட வேண்டியுள்ளதால் தகுதியான ஒப்பந்தப்புள்ளி கோரி பழுதுகளை நீக்கம் செய்திடவும் அதற்கான உத்தேச தொகை ரூ.42,000/- (ரூபாய் நாப்பத்திரண்டாயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1760/2024/எச்1)**

**தீர்மானம் எண். 661**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

கடையநல்லூர் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் தனியார் நிறுவனம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சி நிரந்தர தூய்மை பணியாளர்கள் மூலம் வாறுகால் சுத்தம் செய்து, வாறுகால் கழிவு மண் அகற்றும் பணிகள் LCV, HCV வாகனங்களின் மூலம்

அப்புறப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் அனைத்து LCV, HCV வாகனங்களுக்கு GPS கருவி பொருத்தி கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சி பகுதியில், நகராட்சிக்கு சொந்தமான 8 LCV, 1 HCV வாகனங்களுக்கு நகராட்சி மற்றும் தனியார் நிறுவனத்தின் மூலம், தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி வாகனங்களுக்கு GPS கருவி பொருத்தி கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச தொகையாக ரூ.75,000/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி தொகையினை செலவினம் மேற்கொள்ளவும், குறைந்த விலைப்புள்ளி குறிப்பிடும் நிறுவனத்திற்கு பணி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2132/2024/எச்1)**

**தீர்மானம் எண். 662**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2.0 திட்டதின்படி நடைமுறை கட்டணமில்லா தொலை தொடர்பு எண்.14420 ஐ செயல்படுத்தப்பட்டதற்கு திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.859/2022/பி1 நாள்.27.06.2024ன் மற்றும் 19.07.2024ன் படி கட்டணமில்லா தொலை தொடர்பு எண்ணிற்கு ரூ.60,600/- என நிர்ணயம் செய்து மேற்படி தொகைகளை சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கட்டணமில்லா தொலைபேசி இணைப்பு வருட பராமரிப்பு தொகை ரூ.4660/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே இரண்டு கட்டணங்களும் சேர்த்து ரூ.65260/- நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி தொகையினை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், சம்பந்தப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2167/2024/எச்1)**

**தீர்மானம் எண். 663**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 8**

கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு நிரந்தர தூய்மை பணியாளர்கள் கொண்டு வாறுகால் சுத்தம் செய்தல், MCC, RRC மையங்களில் பணிபுரிதல் சாலைகளை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம் மற்றும் தினசரி சந்தை சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை அன்றாடம் மேற்கொள்வதற்கு கீழ்கண்ட விபரப்படி தளவாடசாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிட, அதற்கான

உத்தேச செலவீனம் ரூ.10,00,000/-(ரூபாய் பத்து இலட்சம்)ற்கும் மேற்கொள்ள மன்றத்தின் முன்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>தளவாடசாமான்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| 1. | மண்வெட்டி | 50 |
| 2. | கடப்பாரை | 10 |
| 3. | கோடாரி | 6 |
| 4. | சிறிய முள்கரண்டி மூங்கில் | 30 |
| 5. | பெரிய கைமாறு | 50 |
| 6. | கைமாறு | 100 |
| 7. | அருவாள் | 20 |
| 8. | வாறுகால் கரண்ட பெரியது | 40 |
| 9. | வாறுகால் கரண்டி சிறியது | 40 |
| 10. | ஒட்டடை கம்பு | 50 |
| 11. | சவ்வல் | 10 |
| 12. | சாலை சுத்தம் செய்யும் BRUSH | 100 |
| 13. | முள் கரண்டி பெரியது | 25 |
| 14. | இரும்பு வாளி | 20 |
| 15. | இரும்பு சட்டி | 30 |
| 16. | மாப்பு | 20 |
| 17. | தண்ணீர் | 8 |
| 18. | காலுறை | 30 |
| 19. | கையுறை | 300 |
| 20. | முகவுறை | 100 |
| 21. | தொப்பி | 30 |
| 22. | ஒளிரும்சட்டை | 70 |
| 23. | இரும்பு தொரட்டி | 20 |
| 24. | பிளாஸ்டிக் பக்கெட் | 20 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2551/2024/எச்1)**

**தீர்மானம் எண். 664**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கிருமி நாசினிகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்க்காணும் பொருட்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)ற்கும் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>தேவைப்படும் பொருட்கள் விவரம்:</u>**

| | | |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு தூள் | 15000 கி.கி |
| 2. | பிளீச்சிங் பவுடர் | 5000 கி.கி |

| | | |
|---|---|---|
| 3. | கருப்பு பினாயில் | 100 லி |
| 4. | வெள்ளை பினாயில் | 200 லி |
| 5. | டாய்லெட் கிளினிங் ஆசிட் | 200 லி |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2549/2024/எச்1)**

**தீர்மானம் எண். 665**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 10**

கடையநல்லூர் நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பணிபுரியும் உள் மற்றும் வெளிப்புற சீருடை பணியாளர்களுக்கு 2024-2025 ஆம் ஆண்டுக்கான சீருடைகள், சீருடைகளுக்கான தையற்கூலி வழங்கவும் பொதுசுகாதாரப்பிரிவு தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள், மகப்பேறு ஆயா, பொறியர் பிரிவு ஓட்டுநர், இரவு காவலர், துடைப்பாளர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகிய பணியாளர்களுக்குச் சீருடைகளை கோ-ஆப்டெக்ஸ் திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.300000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2548/2024/எச்1)**

**தீர்மானம் எண். 666**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 11**

கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு மருந்துகள் மற்றும் முதிர் கொசு ஒழிப்பு மருந்துகள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்)த்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பாதுகாப்பு உபகரணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பேசில்லஸ் துரின்ஜியன்ஸிஸ் | 200லி |
| 2. | பைரித்திரம் | 300லி |
| 3. | டெமிபாஸ் | 200லி |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2550/2024/எச்1)**

**தீர்மானம் எண். 667**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 12**

கடையநல்லூர் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வந்த டிப்பர் லாரி எண்: TN76B1222 வாகனம் 2006ம் ஆண்டு வாங்கப்பட்டது. தற்போது இதற்கு 18 ஆண்டுகள் ஆகிவிட்டது வாகனம் இயங்காத நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி குப்பை லாரி வாகன எண். TN76B1222, வாகனத்திற்கு சாலைவரி, இன்சுரன்ஸ் மற்றும் இதர வரி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தி வரி பாக்கி இல்லா சான்று பெற்றிடவும் அதற்கான உத்தேச தொகையாக ரூ.10,500/– செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2295/2024/எச்1)**

**தீர்மானம் எண். 668**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 13**

கடையநல்லூர் நகராட்சியில் மின்கம்பியாளராக பணிபுரிந்து சுய விருப்ப ஓய்வு காரணமாக இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.670/2024/சி1 நாள்.01.10.2024ன்படி திரு.R.சிரில்ஸ்டீபன் ஓய்வு பெற்றுள்ளார். அன்னார் ஓய்வு பெற்றுவிட்டதால் சிறப்பு சேமநலநிதி தொகையின் அரசு பங்கு தொகை ரூ.10,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2650/2024/A4)**

**தீர்மானம் எண். 669**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 14**

கடையநல்லூர் நகராட்சியில் திரு.முருகையா எண்.65 தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.04.2024ல் ஓய்வு பெற்றுள்ளார். எனவே அன்னாரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– அதற்கான வட்டித்தொகை ரூ.8980/– அரசின் பங்களிப்புத்தொகை ரூ.10000/– ஆக மொத்தம் ரூ.21940/–யை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.914/2024/A4)**

**தீர்மானம் எண். 670**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 15**

கடையநல்லூர் நகராட்சியில் திரு.முருகன், எண்.25 தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2024ல் ஓய்வு பெற்றுள்ளார். எனவே அன்னாரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– அதற்கான வட்டித்தொகை ரூ.32501/– அரசின் பங்களிப்புத்தொகை ரூ.10000/–ஆக மொத்தம் ரூ.45461/–யை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1482/2024/A4)

**தீர்மானம் எண். 671**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 16**

கடையநல்லூர் நகராட்சியில் திரு.முருகன், எண்.56 தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2024ல் ஓய்வு பெற்றுள்ளார். எனவே அன்னாரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– அதற்கான வட்டித்தொகை ரூ.9918/– அரசின் பங்களிப்புத்தொகை ரூ.10000/–ஆக மொத்தம் ரூ.22878/–யை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1486/2024/A4)

**தீர்மானம் எண். 672**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 17**

கடையநல்லூர் நகராட்சியில் திரு.முருகன், எண்.59 தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2024ல் ஓய்வு பெற்றுள்ளார். எனவே அன்னாரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– அதற்கான வட்டித்தொகை ரூ.9918/– அரசின் பங்களிப்புத்தொகை ரூ.10000/–ஆக மொத்தம் ரூ.22878/–யை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1483/2024/A4)

**தீர்மானம் எண். 673**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 18**

கடையநல்லூர் நகராட்சியில் திரு.இசக்கி, எண்.67 தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2024ல் ஓய்வு பெற்றுள்ளார். எனவே அன்னாரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– அதற்கான வட்டித்தொகை ரூ.9918/– அரசின் பங்களிப்புத்தொகை ரூ.10000/–ஆக மொத்தம் ரூ.22878/–யை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1485/2024/A4)

**தீர்மானம் எண். 674**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 19**

கடையநல்லூர் நகராட்சியில் திருமதி.அழகம்மாள், எண்.58 தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2024ல் ஓய்வு பெற்றுள்ளார். எனவே அன்னாரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/–

அதற்கான வட்டித்தொகை ரூ.9918/- அரசின் பங்களிப்புத்தொகை ரூ.10000/- ஆக மொத்தம் ரூ.22878/-யை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1484/2024/A4)

**தீர்மானம் எண். 675**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட மேலக்கடையநல்லூரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்க கோரியுள்ளார். மேற்படி தீயணைப்பு நிலையத்திற்கு மற்றும் பணியாளர் குடியிருப்புக்கு என ஐந்து (5) எண்ணம் குடிநீர் இணைப்பு வழங்க கேட்பு கட்டணமாக ரூ.87910/-ஐ செலுத்துவதற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.519/2024/இ2, நாள்.03.04.2024 இல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கட்டணத்தை ECS மூலமாக 27.08.2024 அன்று இந்நகராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. மேலும் நிலைய அலுவலர் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகளுக்கு நகராட்சி பொது குடிநீர் குழாயிலிருந்து அவர்களது குடியிருப்புகள் சுமார் 250 அடி தொலைவில் உள்ளது எனவும், அத்துறையின் மூலம் 250 அடிக்கு 3" பகிர்மான குழாய் அவர்களது சொந்த செலவில் அமைப்பதற்கு தீயணைப்பு அலுவலர் அவர்களின் 27.08.2024-ம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார். மேற்படி, பகிர்மானக் குழாயினை அவர்களது சொந்த செலவில் அமைத்து குடிநீர் இணைப்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.519/2024/ இ2)**

**தீர்மானம் எண். 676**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 21**

அரசாணை எண்.94 நாள்.18.07.2024 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கண்ட அரசாணையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி பரப்பளவு உள்ள மனையில் 3500 சதுர அடி பரப்பளவிலான தரைத்தளம் மற்றும் முதல்தளக்குடியிருப்பு கட்டிடம் கட்ட சுயசான்று அடிப்படையில் இணையவழி கட்டிட அனுமதி வழங்குவதற்கு ஒருங்கிணைந்த கட்டணங்கள் நிர்ணயம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கடையநல்லூர் நகராட்சி முதல்நிலை நகராட்சி என குடியிருப்பு கட்டிட உரிம கட்டணங்கள் சதுர மீட்டருக்கு ரூ.750/- (அ) சதுர அடிக்கு ரூ.70/- வீதம் வசூலிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 16.08.2024 ஆம் தேதி தீர்மான எண்.650 இல் குடியிருப்பு கட்டிட உரிம கட்டணங்கள் சதுர மீட்டருக்கு ரூ.750/- (அ) சதுர அடிக்கு ரூ.70/- வீதம் வசூலிக்கவும் அரசாணையில் குறிப்பிடாத குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 1 சதுர மீட்டருக்கு ரூ.1150/- வீதம் 01.08.2024க்கு பின்னர் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பங்களுக்கு வசூலிக்க

மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. அரசாணையில் மற்ற கட்டிடங்களுக்கு கட்டண உரிமம் எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. இது தொடர்பாக தக்க அறிவுரை வழங்க கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் கேட்டு 14.08.2024ஆம் தேதி கடிதம் அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்கள் 29.08.2024ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களை கேட்டு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

எனவே, சுயசான்று அடிப்படையில் கட்டிட அனுமதிக்கோரி வரும் குடியிருப்பு பயன்பாடு கட்டிடங்களுக்கு மட்டும் அரசாணையில் நிர்ணயம் செய்துள்ள தொகையினை 01.08.2024 முதல் வசூல் செய்யவும் இதர பயன்பாடு கட்டுமானங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுரை பெற்ற பின்பு கட்டணங்கள் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண்.1227/2019/எப்1)

**தீர்மானம் எண். 677**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 22**

கடையநல்லூர் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்.13, பேட்டை, மேற்குமலம்பாட்டை ரோட்டில் அமைந்துள்ள மயான வளாகத்தில் புதிதாக 3.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கும், வார்டு எண்.31, இந்திரா நகர், புதிய காலனி பகுதியில், புதிதாக 2.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கும் தேர்வு செய்யபட்டுள்ள இடத்தில் மண்பரிசோதனை செய்வதற்கான கட்டணம் ரூ.47,200/- மற்றும் கட்டிட வடிவமைப்பு (structural Design) செய்வதற்கான கட்டணம் ரூ.1,18,000/-ம் ஆக மொத்தம் ரூ.165200/-ஐ The Principal, Government College of Engineering, Tirunelveli என்ற முகவரிக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.592/2024/இ1)**

**தீர்மானம் எண். 678**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 23**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் புதிய ஈப்பு எண்.TN76 AT2634 வாகனத்திற்கு வெல்டிங் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.5,000/-க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2453/2024/இ1)**

**தீர்மானம் எண். 679**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 24**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் புதிய ஈப்பு எண்.TN76 AT2776 வாகனத்திற்கு ஆயில் மாற்றம் செய்யவும், வாகனத்தினை முழுவதும் பரிசோதனை செய்து பழுதுகளை நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மகேந்திரா & மகேந்திரா, தென்காசி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.16,000/– க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2452 /2024/இ1)**

**தீர்மானம் எண். 680**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 25**

தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள் மற்றும் 2022–2023, 2023–2024 மற்றும் 2024–2025ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் நிதி விபரத்தினை கீழ்காணும் விபரப்படி நாளிதழ்களில் பிரசுரம் செய்தமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் தொகை வழங்க வேண்டிய பெயர் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | தின தந்தி | THE DAILY THANTHI | ரூ.39,480/– |
| 2. | மாலை மலர் | MALAR PUBLICATIONS LTD | ரூ.19,950/– |
| 3. | தினகரன் | KAL PUBLICATIONS (P) LTD | ரூ.32,760/– |
| 4. | தினமணி | EXPRESS PUBLICATION (Madurai) Private Limited | ரூ.34,860/– |
| 5. | தமிழ் முரசு | KAL PUBLICATIONS (P) LTD | ரூ.12600/– |
| 6. | மாலை மலர்(தொழில் மலர்) | MALAR PUBLICATIONS LTD | ரூ.19,950/– |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2037/2024 /இ1)**

**தீர்மானம் எண். 681**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 26**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் புதிய ஈப்பு எண்.TN76 AT2776 வாகனத்திற்கு நான்கு டயர்கள் வாங்கி தற்போது 51,500 கிலோ மீட்டர்கள் ஓடியுள்ள நிலையில் டயர்களில் தோய்வு ஏற்பட்டு அடிக்கடி பஞ்சர் ஏற்படுவதால் மேற்படி வாகனத்தினை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதிதாக நான்கு எண்ணம் டயர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மகேந்திரா & மகேந்திரா, தென்காசி நிறுவனத்தின் மூலம் வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.38,000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2701/2024/இ1)**

**தீர்மானம் எண். 682**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 27**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் புதிய ஈப்பு எண்.TN76 AT2634 வாகனத்திற்கு ஆயில் மாற்றம் செய்யவும், வாகனத்தினை முழுவதும் பரிசோதனை செய்யும் பணிகளை மேற்கொள்ளவும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மகேந்திரா & மகேந்திரா, தென்காசி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.16,800/—க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2451/2024/இ1)**

**தீர்மானம் எண். 683**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 28**

இந்நகராட்சி வார்டு எண்.13, மலம்பாட்டை ரோட்டில் அமைந்துள்ள ஆடு அறுக்கும் நிலையத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் பிரசுரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.16,582/—ஐ “THINA BOOMI” நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2564/2024 /இ1)**

**தீர்மானம் எண். 684**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 29**

இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கடையநல்லூர் துவக்கப்பள்ளி கடந்த 50 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மேற்படி பள்ளியில் வரும் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கையினை அதிகரிக்கவும், மாணவ, மாணவிகளின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நகராட்சி துவக்கப்பள்ளியின் மேல்தளத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணி. | 30.00 |
| 2. | பள்ளி மாணவர்களுக்கு தேவையான பெஞ்ச், டெஸ்க் மற்றும் இதர தளவாட சாமான்கள் வாங்கி வழங்கும் பணி. | 20.00 |
| 3. | நகராட்சி துவக்கப் பள்ளி முன்பு உள்ள மழைநீர் வடிகால் கான்கிரீட் மூடி மற்றும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி. | 10.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2257/2024/இ1)**

**தீர்மானம் எண். 685**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 30**

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் இயங்கும் பழைய ஈப்பு எண்.TN76 AC1093 வாகனத்திற்கு ஆயில் மாற்றம் செய்யவும், வாகனத்தினை முழுவதும் பரிசோதனை செய்து பழுதுகளை நீக்கம் செய்யும் பணிகளை மேற்கொள்ளவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான டெரிக் மகேந்திரா & மகேந்திரா, தென்காசி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.42,000/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2130/2024/இ1)**

**தீர்மானம் எண். 686**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 31**

கடையநல்லூர் நகராட்சி – வார்டு எண்.01, குமந்தாபுரம், பிள்ளையார் கோவில் அருகில் உள்ள சிறுமின் விசைத்தொட்டி மற்றும் வார்டு எண்.23, மாவடிக்கால் மந்தை அங்கன்வாடி அருகில் உள்ள சிறுமின் விசைத்தொட்டிகளுக்கு புதிதாக மின்மோட்டர் பொருத்துவதற்கும்அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.0.60/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2562/2024/இ1)**

**தீர்மானம் எண். 687**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 32**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினி (HP – All –in –One) – 10 எண்ணங்கள், பிரிண்டர்கள் (HP – All –in –One) – 5 எண்ணங்கள், All –in – One System Adapter – 10 எண்ணங்கள் போன்றவற்றை மத்திய அரசு விலை நிர்ணயம் செய்துள்ள GeM (Government e- Market price - அரசு மின் சந்தை) முன்னாள் DGS & D விலைவிகிதத்தில் வாங்கி, வழங்கவும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3670/2023/இ1)**

**தீர்மானம் எண். 688**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 33**

இந்நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளின்படி மிகவும் அத்தியவசியமாகவும் உடன் மேற்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளதாலும் கீழ்கண்ட பணிகளை நகராட்சி வருவாய் மற்றும் முலதன நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பெறும் தீர்மானம்.

| வ. எண் | விபரம் | தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.01, குமந்தாபுரம் பகுதியில் பழுதடைந்த சாலைகள் சீரமைக்கும் பணி | 4.80 |
| 2 | வார்டு எண்.03, கருப்பசாமி கோவில் வடக்குத் தெருவில் தடுப்புச்சுவர் கட்டும் பணி | 6.00 |
| 3 | வார்டு எண்.04, ரயில்வே பீடர் ரோடு குறுக்குத் தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 3.00 |
| 4 | வார்டு எண்.05. மலம்பாட்டை குறுக்குத்தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 11.20 |
| 5 | வார்டு எண்.06, ரகுமானியாபுரம் 10–வது தெரு, 11–வது தெரு மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 9.00 |
| 6 | வார்டு எண்.07 பிள்ளையார் கோவில் தெற்குத்தெரு மற்றும் கிழக்கு மலம்பாட்டை குறுக்குத்தெருவில் சிறுமின்விசை தொட்டி அமைக்கும் பணி | 5.00 |
| 7 | வார்டு எண்.08, வடக்குவிளை காலனி தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 17.60 |
| 8 | வார்டு எண்.09, மங்கம்மாள் சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் சாலை பராமரிப்பு பணி | 9.80 |
| 9 | வார்டு எண்.12, ரகுமானியாபுரம் பகுதியிலுள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சீரமைப்பு பணி | 5.00 |
| 10 | வார்டு எண்.15 ஜவஹர் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 6.50 |
| 11 | வார்டு எண்.16, ரயில்வேபீடர் ரோடு 2 எண்ணம் சிறுமின்விசை தொட்டி அமைக்கும் பணி | 5.00 |
| 12 | வார்டு எண்.17 வேளார் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 6.20 |
| 13 | வார்டு எண்.18, புளியமுக்குத்தெரு மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 3.80 |
| 14 | வார்டு எண்.19 , பெண்கள் பள்ளிக்கூடம் தெருவில் உள்ள மழைநீர் வடிகாலுக்கு மூடி அமைத்தல் | 2.70 |
| 15 | வார்டு எண்.20, மதினாநகர் மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 16.00 |
| 16 | வார்டு எண்.21, பஜார் ரோடு, வடபுறம் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மற்றும் வானுவர் தெருவில் சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 12.00 |
| 17 | வார்டு எண்.22, மாவடிக்கால் ரயில்வே கேட் கீழ்புறமுள்ள தெருக்களுக்கு குடிநீர் விநியோகக்குழாய் அமைக்கும் பணி | 4.00 |
| 18 | வார்டு எண்.24, அல்லிமுப்பன் குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் சாலை பராமரிப்பு பணி, வார்டு எண்.24 (ம) 33 குசவன் குன்று தென்வடல் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 19.80 |
| 19 | வார்டு எண்.25, பெரியதெரு கீழ்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 2.00 |
| 20 | வார்டு எண்.26, வடக்கு ரதவீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 7.00 |
| 21 | வார்டு எண்.27, இல்லத்தார் தெற்குத்தெரு மற்றும் பவுண்டு கிழக்குத்தெருவில் சிறுமின்விசை தொட்டி அமைக்கும் பணி. | 5.00 |
| 22 | வார்டு எண்.28, வடக்குத்தியம்மன் கோவில் தென்வடல் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. | 6.80 |
| 23 | வார்டு எண்.29, கிருஷ்ணன் கோவில் மேற்கு குறுக்குத் தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. | 3.00 |

| | | |
|---|---|---|
| 24 | வார்டு எண்.30, ஆதிதிராவிடர் தெற்குத்தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி. | 15.00 |
| 25 | வார்டு எண்.32, கிருஷ்ணன் கோவில் வடக்குத்தெரு மற்றும் காளியம்மன் கோவில் தெரு (தெற்கு கடைசி) சிறுமின்விசை தொட்டி அமைக்கும் பணி | 5.00 |
| 26 | வார்டு எண்.33, உமர் முக்தார் தெரு (திப்பு சுல்தான் நகர்) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 12.30 |

**தீர்மானம் எண். 689**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**(ஓம்)M.A.ஹபீபுர் ரஹ்மான்,**
**நகர்மன்ற தலைவர் ,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**